Sheep Farms

* 158 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any scheme to revive the Sheep Farming Centres in Hosur and Denkanikotta taluks;

(b) if not, the proposal of the Government as to how to make use of the buildings already constructed for the same purpose sometime back; and

(c) the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவை முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

Import of exotic breed of cattle

* 159 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state the number of exotic bulls like Jersey, Freisian and Red Dane imported so far in Tamil Nadu?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கடந்த எட்டு ஆண்டுகளில் அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அயலினக் கால் நடைகளில், இந்திய அரசு, இந்த மாநிலத்துக்கு 26 ப்ரீஷியன் கால் நடைகளையும் (19 பசுக்கள், 7 காளைகள்), 55 ஜெர்ஸி கால்நடைகளையும் (41 காளைகள். 14 பசுக்கள்) ஒதுக்கித் தந்தது.

THIRU B. VENKATASWAMY : Is it not a fact that the imported exotic breeds are poor in quality since we are getting them free from other nations? So, will this Government come forward to get very good exotic breed at least by purchasing them from abroad so as to breed good quality of animals in Tamil Nadu?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்படத்தக்க மிகத் திறன் பெற்ற காளை ஒன்று ரூ. 10,000 ஆகிறது. நல்ல இனப் பசு ஒன்று ரூ. 7,000 ஆகிறது. இப்படி தமிழ்நாட்டிற்கு மட்டும் ஏறத்தாழ 240 காளைகளும், 540 பசுக்களும் இந்த வளர்ப்புத் திட்டத்திற்குத் தேவைப் படுகின்றன. ஏறத்தாழ ரூ. 62 லட்சம் வெளிநாட்டுச் செலாவணி அதற்காகத் தேவைப்படும். மத்திய அரசு எந்த அளவுக்கு

@ 262-264-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 18]

ஒத்துழைப்பைத் தர முடியுமோ அந்த அளவு பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த பெர்ஷியன் போன்ற எருதுகளை மாவட்ட ரீதியாக வழங்குவதற்கு அரசாங்கம் ஏதேனும் முனைப்புத் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படி இருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்போது கால்நடைப்பண்ணைகளில்தான் இந்த உயர்தர எருதுகள் வைக்கப்படுகின்றன. அவற்றில் சில வயதாகிவிட்ட தன்மையை எய்திவிட்டதாக நான் அறிகிறேன். மாவட்ட அளவில் ஏற்கெனவே பிரிசியன் எருதுகள், சிந்தி காளைகள், முர்ரா எருதுகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. நாம் கேட்கிற அளவுக்கு ஏராளமான எண்ணிக்கை கிடைக்குமானால், ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தக் காளைகளைப் பயன்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, ஆஸ்திரேலியா போன்ற மேலை நாடுகளிலிருந்து வரவழைக்கப்படும் உயர்தர காளைகளை உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்குத்தான் அதிகமாகத் தருகிறார்கள், தமிழ் நாட்டிற்கு அந்த அளவுக்குத் தருவதில்லை என்ற குறைபாடு இருக்கிறதே, இதைப் பற்றி மத்திய அரசின் கவனத்திற்கு மாநில அரசு கொண்டு போய் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உத்திரப் பிரதேசம் மிகப் பெரிய பிரதேசம் என்று சொல்லி, கவனம் அதிகம் செலுத்துவதற்கு வேறு காரணம் காட்டக் கூடும். ஆனால் அவர்கள் தமிழ்நாட்டை அலட்சியப்படுத்த முடியாது என்று நான் கருதுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Out of these three varieties, viz., Freisian , Jersey and Red-Dane which is supposed to be the best? Would the Government make arrangements to import the best exotic breed?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நம்முடைய நாட்டினுடைய நிலைமையை நோக்குகிறபோது மூன்றுமே மிகச் சிறந்த இனங்கள்தான்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள காங்கேயம் மாடுகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதன் மூலம், அவற்றை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர் அவர்களுக்கு அந்தக் காளைகளைப் பற்றி நன்றாகத் தெரிந்து இருக்கும். அந்த மாடுகள் உழவு வேலைகளுக்குத்தான் அதிகம் பயன்படுகின்றன. மேல் நாடுகளில் உழுவதற்கு மாடுகளை பயன்படுத்தும் அவசியமே இல்லை. மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அதைக் கண்காட்சியில் வைக்கவேண்டுமானால், அதற்கு நாமே செலவழிக்க வேண்டும்.

துப்புரவுப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள்

*** 160 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) ஊராட்சி மன்றங்களிலும் நகர் மன்றங்களிலும் பணி புரியும் துப்பரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்திற்கு மத்திய அரசு 1970-71, 1971-72-லும் எவ்வளவு தொகை அளித்தது?

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் எங்கெங்கே வீடுகள் (1970-72 வரை) கட்டித் தரப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஒவ்வொரு ஆண்டுக்கும் முறையே ரூ. 9,00,000.

(இ) 1970-71.

நகர் மன்றங்கள்—

1. கரூர்—கூரைவரை கட்டிட வேலை முடிந்திருக்கிறது.
2. திருச்சிராப்பள்ளி—வேலை துவக்கப்பட இருக்கிறது.

ஊராட்சி மன்றங்கள்—

பொன்மலை, உப்பிலியாபுரம், கரியமணிகண்டம், தோட்டக்குறிச்சி, பொன்னமராவதி, அன்னவாசல் ஊராட்சிகளில் கட்டிட வேலை முடிந்துவிட்டது. பரத்தியூர், புல்லம்பாடி, பொம்பலூர். வெப்பைக் குடிக்காடு, குழித்தலை ஊராட்சிகளில் கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கிறது.